# தலைப்பு: நல்ல சமையல்




**வழங்கியோர்**

### நல்ல சமையல்

அரச்சமிளகாய் மணமணக்க
அம்மாகை வாசம்வரும்
அரைச்சித்துவச்சி எடுக்கையிலே
அம்மியும்தான் தேய்ந்திருமக்கும்
உரிச்சிவைத்த வெண்காயம்
உப்பினிலே போட்டெடுக்க
திரிச்செடுத்த தேங்காயும்
திரண்டுவரும் மீன்குழம்பும்

வறுத்தெடுத்த சுண்டலுடன்
வகைவகையாய் பொரியலுண்டு
கறந்தெடுத்த பால்காச்சி
கடைந்தெடுக்கும் நெய்மணமும்
பச்சைவகை மரக்கறியில்
பத்துச்சத்தும் நிறைந்திருக்கும்
இச்சையுடன் சுவைத்துண்ணும்
இளமைக்கால நினைவுகளும்

பத்தியமாய் பார்த்துப்பார்த்து
பாட்டிமாரும் சமைத்திருக்க
சித்தமுடன் வைத்தியமும்
சிறந்துவிளங்கும் உணவுகளும்
பால்பொங்கல் வடையுமங்கு
பாயாசம் சேர்ந்துவரும்
கால்நடையில் நண்பர்களும்
காலையிலே நடந்துவர

முற்றத்து மல்லிகையில்
முழுமணமும் பரப்பிவர
சுற்றமும் புடைசூழ
சுதந்திரமாய் உண்டுகளிப்போம்.

**சரளா விமலராஜா**
**சுவீஸ்**

### நல்ல சமையல்

நவதானியம் நர நரங்க
அம்மியிலே பக்குவத்தை இடியிடிக்க
அறுசுவையில் அமுதம் சுரக்க
எனக்கு பிடித்த உணவினை
பாசம் சேர்த்து சமைத்துவைத்து
காத்திருப்பார் என் பாட்டி!

காய்கறிகள் நறு நறுக்கி
அடுப்பினிலே கொதி கொதிக்க
நறுமணத்தில் மண மணக்க
எனக்கு பிடித்த உணவினை
அன்பு சேர்த்து சமைத்துவைத்து
காத்திருப்பார் என் அன்னை !
காரசாரம் நன்கு சேர்த்து
முக்கனியின் சுவை இருக்க
புதிய உணவை சமைத்துவைத்து
எனக்குப்பிடிக்க வேண்டுமென தவமிருந்து
காத்திருப்பாள் என் மனைவி!

இவையனைத்தும் பசிமறந்து நானுண்ண
அவர்கள் மனம் நடுநடுங்கி
காத்திருப்பது ஒருச்சொல் அன்றே!
சமையலெனும் ஒரு கலையில்
அறுசுவையின் பதம் அறிந்து
சமைப்பதென்பது அறிது அன்றோ!
அச்சிறு நிறை குறைகளை
நாமறிந்து குறை கூறியுண்ணாமல் அவர்களின்
அன்பறிந்து உண்ணலாமே !
நம் பாட்டியின் பக்குவத்தை!
காக்கை நரி அறிந்தவற்றை
நாம் மறந்து போனதேனோ !

**ச.குமரவேல் .**

**நல்ல சமையல்**

செந்தூர் சாந்தும் செந்நெறி வாக்கும்
சேர்த்தரைத்த சிலமிளகாய் மணக்கிறதே!
வந்தோர் நிறைய வறுத்தரைத்த மல்லி
வாயிற்படி மறுவீதி தாண்டிவரும் இலவசமாய்!
பசுந்தயிர் பிசைய பால்மணம் மாறும்
பால்மிளகாய் படையலின்மேல் பனித்துளியும்
விசும்பும் பாசம் விழிவழி காணா
விரைந்துநிறை மணம்வீசும் முறைகாணும்!

நெய்மணக்கும் கத்தரிக்காய் நீண்டிருக்கும்
மண்சட்டி
நெத்திலிமீன் சுவையூறும் நாவூற்றாய்!
மெய்மணக்கும் நாளிரண்டு பொய்யல்ல
அம்மாகை
மெல்லாது வழிந்தோடும், பக்குவத்தால்!
தினைமாவு கேழ்வரகு வரகரிசி கைக்குத்தல்
திசையெட்டில் கிடைத்த அரியபல கீரைவகை !
வடிநீரில் சத்திருக்காம் வடித்தவுடன் இருமடக்கு
வாசனையில் பாசமிகும் அந்திநேரம் !

விருந்தாளி வந்துவிட்டால் வீட்டுவளர் சேவல்முதல்
இளசுவரை கொதித்தடங்கும் மஞ்சளுடன் !
வளர்க்காதோர் வீடுவந்து வாங்கிப் போவோர்
ஏராளம்
எஞ்சியவை வீடுவந்து வாங்கி செல்லும்
இரவுவேளை வியாபாரிக்கு!

திருவிழாக்கள் வந்துவிட இரண்டுமுறை
இட்லிவடை தெவிட்டாது, கணக்கில்லா அடுக்கோ,
எண்ணிக்கையோ !
நினைத்தாலே நாவூறும் நெகிழ்கொள்ளும் அம்மா
சமையல் நல்ல சமையல்!
நினைக்காத பலகாரம் நித்தம்பல மனைவிதர
நினைவில் வரும் வருமகளோ மருமகளோ தரும்
நல்ல சமையல் !

வந்தவுடல் சொந்தவுடல்
வளர்த்துவிட்ட நல்ல சமையல் !
சொந்தமில்லா உறவுகளும் பரிமாற
விழைந்தழைக்கும் அருஞ்சுவை உணவகங்கள் !
வெந்தவகை எந்தவகை எந்ததிசை சென்றாலும்
முந்திவர மனமகிழ்வு கொண்டுவரும் !
எந்த சமையல்? நல்ல சமையல்??
தந்தவகை தாய்ப்பாலாம்; தமிழ்ப்பால்
எந்தவகை!
எந்த வகை? இல்லை இல்லை சந்த வகை !
இரண்டு வேளை உணவை எவரும்
உட்கொள்ளார்!
திரண்டு வரும் பால்கொண்டு தோய்த்தெடுத்த
நறுந்தேனும் தரும் சமையல்!

எல்லைவிட்டு தாண்டாது எந்த வீட்டு சமையலும்,
தில்லையில்லை அரங்கமில்லை வானமில்லை
பூமியல்லை வார்த்தெடுத்த கோள்கள்வரை…
யாத்திட்ட பாவகையில் ஆக்கியநல் சமையல்
படையலுக்கு பணிந்து வரும் தெய்வமும் தான் !
பாவடிக்க நாபடிக்க நாவிசைக்க
நல்படைப்பும் நல்ல சமையல்!

**ஆக்கியோன்**
**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**

**நல்ல சமையல்**

ருசிகொண்ட நாவுக்கு வேண்டுமே!
அறுச் சுவைகளின் அரசனே!
அம்மாவின் கைப்பட
அம்மியில் அரைத்த
மசாலாவின் வாசமே!
உணவுப் பிரியர்களின் சுவாசமே!
கைப் பக்குவத்தை காட்டுமே!
மருத்துவ குணம் நிரம்பிய மருத்துவமே!
கைமணம் நிறைந்த
செட்டிநாட்டின் பெருமையே !
நா ஊறச்செய்யுமே!

**கவிதாயினி திருமதி சை. சபிதா பானு**
**(காரைக்குடி)**